பெரிய தபால் கந்தோரில் புதினப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

# ஸ்ரீ லங்கா

தகவற்பகுதியின் வாராந்தப் பத்திரிகை.

மலர்: 7 | 1963, யூலை 10ந் திகதி | இதழ்: 16

2? JUL 1963

# சர்வதேச கூட்டுறவாளர் தினம்

## உணவு, விவசாய கூட்டுறவு அமைச்சரின் செய்தி

**சமூகத்தின் பொதுநலனுக்காகக் கூட்டாக உழைக்கும் எளிமையான, ஆனல் புரட்சிகரமான கோட்பாட்டை இன்று உலகில் எந்த ஒரு நாடும் உணராது இருக்காது என்றே சொல்லலாம். கூட்டுறவு, சாதாரண வர்த்தகத்திற்கு புதிய தோற்றங்களையும், விதவிதமான வாய்ப்புக்களையும் அளித்துள்ளது. ஏழை பணக்காரரிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் கூட்டுறவினல் ஒடுங்குகின்றன. அனுகூலமற்ற மக்களுக்கு அது விடுதலையையும், சிறந்த வாழ்க்கைத் தரத்தையும் அளிக்கிறது. கூட்டுறவுக் கருத்துப் பரவி வருவதனல், ஜனநாயகமும் ஒரு புதிய கருத்தைப் பெற்று வருகிறது. இன்று, கூட்டுறவு இயக்கத்துக்கு உலகம் முழுவதிலும் சுமார் 15 கோடிக்கு மேற்பட்ட மக்கள் ஆதரவளித்து வருகிருர்கள்.**

எங்கள் நாட்டைப் பொறுத்தவரையில், கூட்டுறவு இயக்கம் சிறிய விவசாயிகளுக்கு உதவும் ஒரு கடன் இயக்கமாகவே ஆரம்பித்தது. 1956 ஆம் ஆண்டுவரை, அதாவது சாதாரண மக்கள் விடுதலை பெற்ற ஆண்டுவரை கூட்டுறவு அதிக வாய்ப்புள்ளதாக இருக்கவில்லை. 1958 ஆம் ஆண்டுக்குப் பின்னர், பலநோக்குக் கூட்டுறவு சேவைகளினல் பலதரப்பட்டோருக்கும் கணிசமாக உதவ முயன்று வருகிறது.

எமது அரசாங்கத்தின் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு நாங்கள் கூட்டுறவுச் சங்கங்களைப் பெரிதும் பயன்படுத்துகிறோம். உத்தரவாத விலைத் திட்டத்தை அமுல் செய்வதற்கும், விவசாயிக்குப் பல்வேறு உதவிப் பணங்களை வழங்குவதற்கும், அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் எமக்கு உதவி புரிந்துள்ளன. கிராம மக்களுக்குக் கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வளவு பணி புரிந்துள்ளன என்பதை எவரும் மறுக்க முடியாது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உண்மையில் கிராம மக்களது

(4 ம் பக்கம் பார்க்க)

## எப்பிள்ளையும் கல்விபெற வேண்டும்

—கல்வி அமைச்சர்

**எத்துணைக் கஷ்ட நிலையில் உள்ள குடும்பத்தில் பிறந்த குழந்தைக்கும் கல்வி கிடைக்கச் செய்வது நாட்டின் கல்வி நிர்வாகஸ்தரின் தலையாய கடமை எனக் கல்வி, கலாச்சார அலுவல் அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லை தெரிவித்துள்ளார்.**

பிரதேச உதவிக் கல்வி அதிபர்கள், மாவட்ட கல்வி அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய மகாநாடு ஒன்று கல்வி அமைச்சில் நடைபெற்றபோது திரு. கலுகல்லை மேற்கண்டவாறு குறிப்பிட்டார். மூன்றாவது கல்வி மசோதா தயாராகிக் கொண்டிருப்பதாகவும், விரைவில் அது ஜனப் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படும். எனவும் அமைச்சர் அறிவித்தார். கல்வி சம்பந்தப்பட்ட காலங் கடந்த பிரமாணங்களையும், விதிகளையும் அகற்ற இம் மசோதா உதவும்

தொழில் நுட்ப விஞ்ஞான துறைகளில் தேசீய தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியவாறு அந்நியர் புகுத்திய கல்வித் திட்டம் அமையவில்லை. தவிர, அது வகுப்பு வேறுபாடுகளையும் ஊக்குவிக்கிறது.

"கல்வி நிர்வாகஸ்தர்களாக இருக்கும் நீங்கள் தேசீயத் தன்மைவாய்ந்த கல்வி முறை, உங்களின் கவனத்திற்குக் கீழ் இருக்கும் பிள்ளைகளுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் உங்கள் உள்ளத்தையே புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறேன்".

ஆசிரியர்களின் மாற்றம், புதிய பாடசாலைகளை அரசாங்கம் எடுத்தல், பாட

(4 ம் பக்கம் பார்க்க)

## புதிய ஆசிரியர்கள் நியமனம்

கல்விப்பகுதி நடவடிக்கை

கல்விப் பகுதி கடந்தாண்டில் 2,800 புதிய ஆசிரியர்களைப் பாடசாலைகளுக்கு நியமித்திருக்கிறது. இந்த எண்ணிக்கையுடன் கடந்தாண்டு இறுதிவரை பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 77,803 ஆகும்.

1962 ஆம் ஆண்டில் கல்விப்பகுதி 376 புதிய பாடசாலைகளை இந்நாட்டின் பல்வேறு பாகங்களிலும் நிர்மாணித்தது. இத்துடன் இந்நாட்டிலுள்ள பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை 8,583 ஆகும்.

கடந்தாண்டில் பாடசாலைகளில் 1·4 வீதமானேர் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். 1961 ஆம் ஆண்டில் பாடசாலைகளிலுள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை 23,18,346 ஆக இருந்தது. கடந்தாண்டில் இந்த எண்ணிக்கை 2,35,433 ஆக அதிகரித்தது.

## கூ. மொ. தா. பதில் தலைவர்

கூட்டுறவு மொத்த விற்பனைத்தாபனத் தலைவர் திரு. ஆர். டீ. சேனநாயக்க 8.7.63 இலிருந்து மூன்று வார லீவு எடுத்திருக்கிருர். விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சர் கௌரவ பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்க கூட்டுறவு மொத்த விற்பனைத்தாபன ஜெனரல் மனேஜரான திரு. வீ. ஏ. ஜே. சேனரத்னவை திரு. சேனநாயக்கா லீவில் வராதிருக்கும் காலத்தின்போது ஜெனரல் மனேஜருடைய கடமைகளுடன் கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தின் அதிபதிகள் சபையின் தலைவராகவும் கடமையாற்றுவதற்கு நியமித்திருக்கிருர் என்று விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சிலிருந்து வெளியான பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.



சென்ற வாரம் அத்தனகலை தேர்தல் தொகுதியிலுள்ள வத்துபிட்டிவலை என்னுமிடத்தில் திறந்து வைக்கப்பட்ட ஹில்டா ஒபேசேகர வயோதிபர் இல்லத்தின் திறப்பு விழாவில் கலந்து கொண்ட கௌரவ பிரதம மந்திரி சிறிமாவோ பண்டாரநாயக்கா உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

# தேசியக் கல்வித் திட்டம்

**பிரதேச உதவி வித்தியாதிபதிகளுக்கும் மாவட்ட வித்தியாதிகாரிகளுக்கும் கௌரவ கல்வி மந்திரி அவர்களின் உரை.**

பிரதேச உதவி வித்தியாதிபதிகள், மாவட்ட வித்தியாதரிசிகள் ஆகிய உங்கள் மத்தியில் இன்று இருப்பதுபற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எனது உரையை ஆரம்பிக்கு முன் எனக்கு முன் இப்பதவியை வகித்த கௌரவ மந்திரி பதுதீன் மஹ்மூத் அவர்களைப் பாராட்ட வேண்டிய கடமை என்னைச் சார்ந்துள்ளது. கௌரவ மந்திரி மஹ்மூத் அவர்களின் முயற்சியினாலும் தூர திருஷ்டியினாலுமே தற்போதய அரசாங்கத்தின் கல்விக் கொள்கை இவ்வளவு வெற்றிகரமாகச் செயற்படுகின்றதென நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. எனவே எமது நாடு அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. 2854 உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரும் வேலைபிரமாண்ட வேலையாகும்; 1960 ம் ஆண்டு நொவெம்பர் மாதம் 17 ந் திகதிய கல்விச் சட்டத்துடன் கௌரவ மந்திரி மஹ்மூத் அவர்களின் பெயர் என்றும் இணைக்கப்பட்டிருக்கும். பாடசாலைகளை அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரும்வேலையை நிறைவேற்றுவதில் அவருக்கு உதவி புரிந்த பிரதி வித்தியாதிபதி, கலாநிதி ஆனந்த குறுகே அவர்களின் பெயரும் இந்நாட்டின் கல்வி வரலாற்றில் இடம் பெறும்.

மூன்றாவது ஒரு சட்டம் இப்பொழுது தயாரிக்கப்பட்டு பூர்த்தி அடைந்து வருகிறது. அது கூடிய விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். வழக்கொழிந்த கட்டளைச் சட்டங்களுக்கும் சட்டக் கோவைகளுக்கும் பதிலாக இக் கல்விச் சட்டம் தொகுக்கப்பட்ட ஒரு பூரண கல்விச் சட்டமாக அமையும். அன்றைய காலத்துக் குடியேற்றக் கல்வித் திட்டம் தொழில்நுட்பத் துறைகளிலும் விஞ்ஞானத் துறைகளிலும் நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய முறையில் அமைந்திருக்கவில்லை என்பது நீங்கள் அறிந்த விடயமே. மேலும் அது சாதிபேதத்தை நீடிக்கச் செய்தது. சனங்களின் கல்வி நோக்கங்களையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு தேசியக் கல்வி உங்கள் பொறுப்பிலுள்ள சகலபிள்ளைளுக்கும் அளிக்கப்படுகின்றதென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் கல்வி நிருவாகஸ்தர்களாகிய நீங்கள் கல்வியைப் பற்றிய உங்கள் கொள்கைகளை மாற்றி அமைக்க வேண்டுமென நான் வற்புறுத்த விரும்புகிறேன். சுருக்கமாகக் கூறின், பிள்ளைகள் எவ்வளவு எளிய குடும்பத்திற் பிறந்திருப்பினும் அவர்கள் ஒவ்வொருவரும் கல்வி கற்கக்கூடிய வசதிகளைப் பெறச் செய்தல் உங்கள் முக்கிய கடமையாகும்.

### ஆசிரியர்களின் மாற்றம்

ஆசிரியர்களின் மாற்றப் பிரச்னை இன்று ஒரு முக்கிய விடயமாகிவிட்டது. எனது மனதிற்குத் தோன்றும் வகையில் இதற்கும் கல்விக்கும் தொடர்பில்லை; இதைத் தீர்ப்பதற்கு வழி என்ன என்று என்னைக் கேட்பின் “ மாற்றம் இல்லை ” என்பதே எனது விடை. எனினும் இவ்விடயத்துக்கு நீங்கள் யாவரும் கவனஞ்செலுத்தி கூடியவிரைவில் இப் பிரச்னையைத் தீர்த்தற்கான ஒரு வழியை நாம் காணவேண்டும். அங்ஙனம் ஒரு வழி காண்போமாளுற்ருன் கல்வி அபிவிருத்தி வேலைகளில் தேர்ச்சி உடையவர்களாகிய நீங்கள் உங்கள் சக்தியையும் நேரத்தையும் உண்மையான கல்வி சம்பந்தமான வேலைகளில் செலவிட முடியும். “ மாவட்ட ஆசிரிய சேவை ”—அதாவது மாற்றங்கோருதற்கு இடமளியாத ஒரு சேவை—ஒன்றினை அமைப்பதே இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு வழியாகும். ஆசிரியரும் பாடசாலையும் நாளடைவில் ஒன்றுபட்டுவிடுவர். வாழ்விலும் தாழ்விலும் அதுவே அவருடைய வசிப்பிடமாகிவிடும். மாவட்ட ஆசிரியர் சேவை ஒன்றினை அனுராதபுரத்தில் ஏற்படுத்துதற்கான உடனடியான நடவடிக்கைகளை எடுக்குமாறு உதவி வித்தியாதிபதி (ஸ்தாபன வேலை) அவர்களைக் கேட்டிருக்கிறேன். இதற்கு ஏன் அனுராதபுரத்தைத் தெரிவு செய்தேனென நீங்கள் ஆச்சரியப்படக்கூடும். பெண் உதவி வித்தியாதிபதியைக் கொண்டுள்ள காரணத்தாலேயே இம்மாவட்டத்தைத் தெரிவு செய்திருக்கிறேன். “ மாவட்ட ஆசிரிய சேவை ” யிலும் பெண்ணே முதலிடத்தைப் பெறட்டும்.

மாற்றங்கள் தொடர்பில் ஏற்படும் முடிவற்ற பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு சகலருக்கும் சந்தர்ப்பம் கொடுக்குமுகமாக சகல மாற்றங்களையும் நிற்பாட்டியிருக்கிறேன். எனினும், பின்வரும் வகுதிகளிலடங்கும் மாற்றங்களை மட்டும் நான் அனுமதித்துள்ளேன் :—

**(1) கடும் நோய்வாய்ப்பட்டவர்கள்.**

எங்கள் நாட்டில் கிடைக்கும் வைத்திய வசதிகளை வேறு நாடுகளில் கிடைப்பவற்றுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இவை சிறந்தவையென்பது யாவரும் அறிந்ததே. மேலும் அத்தகையவசதிகளை சகல மாவட்டங்களிலும் கிடைக்கக்கூடியதாகச் செய்திருக்கிறோம். எனவே சுகவீனங் காரணமாக ஆசிரியர் ஒருவர் மாற்றங் கோருதற்கு அவசியமில்லை. எனவே, ஒரு பகுதியின் மாவட்ட வைத்திய உத்தியோகத்தரின் வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தால் ஆதரிக்கப்படும் ஓர் மாற்ற விண்ணப்பம் கிடைக்குமிடத்து விண்ணப்பிக்கும் ஆசிரியர் சுகவீனங்காரணமாக எடுத்துள்ள லீவையும் சம்பளமற்ற லீவையும் பரிசீலனை செய்ய வேண்டும். ஆசிரியர் எவ்வளவு காலம் ஆஸ்பத்திரியில் இருந்திருக்கிறாரெனவும் எவ்வளவு காலம் சுகவீனங் காரணமாக சம்பளமற்ற லீவில் இருந்திருக்கிறாரெனவும் நீங்கள் ஆராயவேண்டும். உண்மையில் ஆசிரியர் கடும் நோயாளியாயிருப்பின் அத்தகைய ஒருவர் மாற்றத்துக்கு அருகதை உடையவராவர்.

**(2) கணவனும் மனைவியும்.**

ஓர் ஆசிரியையுடைய கணவன் அரசாங்க அல்லது அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற ஒரு கூட்டுத்தாபன உத்தியோகத்தராக அல்லது ஸ்தல ஸ்தாபன உத்தியோகத்தராக இருப்பின் அவர் மாற்றம் பெறும் நேரத்தில் அவருடைய மனைவி செய்யும் மாற்ற விண்ணப்பம் சீர்தூக்கப்பட வேண்டும்.

**(3) மேலதிக ஆசிரியர்கள்.**

எண்ணிக்கையளவில், இருக்கவேண்டிய ஆசிரியர் தொகையிலும் கூடுதலான ஆசிரியர்கள் ஒரு பாடசாலையில் இருக்கக்கூடும். ஆங்கில உதவி ஆசிரியர்கள் அல்லது பட்டதாரி ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்கக்கூடும். சில சமயங்களில் ஒரு பாடசாலையிலுள்ள ஆசிரியர்களுள் ஒருவர் தனது தராதரங்களுக்குப் பொருத்தமான சம்பளத்தைப் பெற முடியாதிருக்கக்கூடும். அத்தகைய ஆசிரியர்கள் மாற்றப்பட வேண்டுமென்பது வெளிப்படையே. மேலும், (சிங்கள ஆசிரியர்களைப் பொறுத்தவரையில்) கொழும்பு, நீர்கொழும்பு போன்ற மாவட்டங்களும் (தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில்) யாழ்ப்பாணமும் மேலதிக ஆசிரியர்களைக் கொண்டுள்ளன. மேலதிக ஆசிரியர்களைக் கொண்ட இத்தகைய மாவட்டங்களிலுள்ள ஆசிரியர்கள் ஏனைய மாவட்டங்களுக்கு மாற்றம் கோரினால் அத்தகைய மாவட்டங்கள் கட்டாயம் கொடுக்கப்பட வேண்டும்.

**(4) ஒத்து மாற்ற விண்ணப்பங்கள்.**

அதே கல்வித் தராதரங்களையுடைய ஆசிரியர்கள் ஒத்து மாற்றங்கோருமிடத்து அவை ஒரு தவணை ஆரம்பத்திலிருந்தே அனுமதிக்கப்பட வேண்டும். மாற்றங்கள் கொடுபடுமிடத்து சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தத்தம் பாடசாலைகளில் உரிய திகதியன்று கடமை ஏற்கிறார்களென நீங்கள் நிச்சயித்துக் கொள்ளவேண்டும்.

**(5) ஒழுக்க நடவடிக்கை மாற்றங்கள்.**

பாடசாலையினதும் வித்தியா பகுதியினதும் விதிகளை மதித்து நடவாத ஆசிரியர் ஒருவர் தனது மாணுக்கரின் நன்மதிப்பை இழப்பதுடன் தனது நடத்தையால் அவர்களுடைய மனோபாவத்தையும் கெடுக்கிறார். ஆசிரியர் எப்படியோ அப்படியே பாடசாலையும் அமையும். சாதாரண வாழ்வில் ஒருவன் எப்படி முயல்கிறானோ அவ்வண்ணமே ஆசிரியர் தொழிலிலும் அவன் முயல்வான். சட்டத்தைமீறும் ஆசிரியர்மீது அவருடைய மாணுக்கர்களின் நலனைக் கருதி உரிய முறையில் நடவடிக்கை எடுககப்பட வேண்டும். ஒரு விசாரணையின் பின் அவர் உரிய முறையில் தண்டிக்கப்பட வேண்டும். இத்தண்டனை இடமாற்றமாகவும் அமையலாம்.

### தலைமை ஆசிரியர்களும் அதிபர்களும்

தலைமை ஆசிரியர்களின் நியமனங்களும் மாற்றங்களும் ஆசிரியர்களின் பதவி உயர்ச்சிகளுடன் சம்பந்தப்பட்டவையாகும். எனவே தலைமைக் கந்தோருடன் கலந்தாலோசித்தே இம்மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். தலைமை ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்குமான காலி இடங்கள் ஏற்படும் நேரங்களில் கூடிய விரைவில் அவை பற்றி தலைமைக் கந்தோருக்கு நீங்கள் அறிவிக்க வேண்டும்.

### மாற்ற வேலையைப் பன்முகப்படுத்தல்

மாற்ற வேலையைத் தலைமைக் கந்தோரில் ஒருமுனைப்படுத்தும் எத்தகைய நோக்கமும் எனக்கு இல்லையென இங்கு கூடியிருக்கும் சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்க விரும்புகிறேன். எவ்வுத்தியோகத்தரினதும் மனதில் எத்தகைய தப்பபிப்பிராயமும் நிலவப்படாதென விரும்புவதினாலேயே தான் நான் திட்டமாக இங்ஙனம் கூறுகிறேன். எனினும், இவ்விடயமாக நடைபெறும் வேலைகள் யாவற்றையும் ஒருமுகப்படுத்துதற்கு தலைமைக் கந்தோரில் ஒரு பிரிவு இருத்தல் அவசியம். உங்கள் முடிபுகளை மாற்றும்படி இப்பிரிவு உங்களைக் கேட்கக்கூடிய அவசியம் சில சமயங்களில் எழக்கூடும். தலைமைக் கந்தோரிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் கட்டளைக்கமைய உப-கந்தோர்கள் ஒழுகவேண்டும். எனினும், அத்தகைய கட்டளைகள் விடுக்கப்படுதற்கு சந்தர்ப்பகள் அதிகம் எழா. திரு. வீ. துரைசிங்கம், உதவி வித்தியாதிபதி (ஸ்தாபன வேலை) அவர்கள் அவருடைய தற்போதய கடமைகளுடன் மாற்ற வேலைகளை ஒருமுகப்படுத்தும் இப்பிரிவுக்குத் தலைமைக் கந்தோரில் பொறுப்பாயிருப்பார். இவ்வேலையுடன் தொடர்புபட்ட அதிர்ச்சிகளையும் சிரமத்தையும் அவர் 1956 ம் ஆண்டு தொடக்கம் சமாளித்து வந்திருக்கிறார்.

### புதிய பாடசாலைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுதல்.

வித்தியா பகுதியை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளில் இது இன்னொன்ருகும். இது சம்பந்தமான வேலை விரைவாகச் செய்து முடிக்கப்படாதமையே இதற்குக் காரணமாகும். இதன் விளைவாக அநேகரின் செல்வாக்கு துர்ப்பிரயோகிக்கப்படுகின்றது. இந் நிதிவருடம் முடிவடைய முன் இவ்வேலை பூர்த்தி செய்யப்பட்ட வேண்டுமென நான் விரும்புகிறேன் 15.2.61 க்குப் பின் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஒன்றிலுள்ள ஆசிரியர் ஒருவரை அரசாங்கத்தின் கீழ் எடுக்க முடியாதென்ற விதி உங்களுக்குத் தெரியுமென நான் நம்புகிறேன். எனவே அத்தகைய பாடசாலைகளைப் பொறுத்த வரையில் பிரச்னை ஒன்றுமில்லை. பாடசாலையை அரசாங்கம் எடுக்கும் திகதியன்று பாடசாலையின் வரவின் அடிப்படையில் அல்லது அதற்கு முன்னடுத்துள்ள இரு வாரங்களின் அல்லது மாதத்தின் வரவுச் சராசரியின் அடிப்படையில் அரசாங்கத்தின் கீழ் சேர்த்துக் கொள்ள வேண்டிய ஆசிரியர்களின் தொகையை நீங்கள் கணித்திருக்கிறீர்கள். அறிவித்தல் கொடாது பாடசாலைக்குத் திடீரென இரண்டு மூன்று தடவைகளில் நீங்கள் சென்று பாடசாலையின் வரவை சரிபார்க்கும் முற்காப்பு நடவடிக்கை எடுத்திருப்பின் மட்டுமே இவ் விதிகள் அமையும். அங்ஙனம் செய்திராதவிடத்து விதிகளில் எவற்றையேனும் சூழ்ச்சியாகப் பொருட்படுத்தி, சி. பா. த. பத்திரம் பெற்ற ஆசிரியர்களைச் சேர்க்கும் திட்டத்தை எவரேனும் துர்ப்பிரயோகித்திருந்தால் அக்குற்றத்துக்கு நீங்களே பொறுப்பாளிகள். 15.2.61 க்கு முன் ஸ்தாபிக்கப்பட்டவையும் இதுவரை (15.7.63 வரை) அரசாங்கத்தால் எடுக்கப்படாதவையுமான பாடசாலைகளைப்பொறுத்தவரையில் பின்வரும் விதியைக் கவனிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசாங்கத்தின் கீழ் எடுத்துக் கொள்ள வேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை 1963 ம் ஆண்டு 2 ந் தவணைக்கான வரவுச் சராசரியின் அடிப்படையிலேயே கணிக்கப்பட வேண்டும். எனினும், சம்பந்தப்பட்ட பாடசாலையின் வரவு இரு தடவைகளில் நடத்தப்படும் திடீர்ப் பரிசோதனைகளால் கணிக்கப்பட வேண்டும்.

### பாடசாலை வேலைகள்

ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதியிலும் செய்யப்பட வேண்டிய அதி முக்கிய வேலைகள் பற்றி 15.7.63க்கு

(3 ம் பக்கம் பார்க்க)

# தேசியக் கல்...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

முன் எனக்கு அறிவிக்குமாறு பிரதேச உத்தியோகத்தர்களையும் மாவட்ட உத்தியோகத்தர்களையும நான் கேட்டிருக்கிறேன். உதவி வித்தியாதிபதிகளும் வித்தியாதிகாரிகளும் வித்தியாதரிசிகளும் சென்று கட்டடங்களை அமைக்கப்பட வேண்டிய இடங்களைத் தெரிவுசெய்வதுடன் இது தொடர்பான வேலை கூடிய விரைவில் ஆரம்பிக்கப்படுகிறதென நிச்சயித்துக் கொள்ளவும் வேண்டும்.

**பெற்ருேர் ஆசிரியர் சங்கங்கள்**

தமது வட்டாரங்களில் நடைபெறும் பெற்ருேர் ஆசிரிய சங்கக் கூட்டங்கள் யாவற்றிற்கும் வட்டார வித்தியாதரிசிகள் சமுகமளிக்க வேண்டும். அத்தகைய கூட்டங்கள் அடிக்கடி நடைபெறுவதுடன் அக்கூட்டங்கள் பற்றிய அறிக்கைகளை வட்டார வித்தியாதரிசிகள் உரிய வித்தியாதிகாரிக்கும் உதவி வித்தியாதிபதிக்கும் உடனுக்குடன் அனுப்பி வைக்க வேண்டும்.

**பாடசாலைக் கொண்டாட்டங்கள்**

பல்வேறு வட்டாரங்களிலுமுள்ள மாணுக்கர்களின் முயற்சிகளையும் பாடசாலைக் கொண்டாட்டங்கள் பிரதிபலிக்கின்றன. தமது மாணுக்கர்கள் பெறும் பயிற்சியைப் பற்றி இவற்றின் மூலம் பெற்ருேர்கள் அறிந்து கொள்வர். பெற்ருேர் தினம், கனியாட்ட விழாக்கள் பேச்சுப் போட்டிகள், கைப்பணிக் கண்காட்சிகள், விளையாட்டு போட்டிகள் ஆகியவை முதலில் ஒவ்வொரு பாடசாலையிலும் நடைபெற வேண்டும். பின்னர் இவை வட்டார ரீதியிலும் மாவட்ட ரீதியிலும் பிரதேச ரீதியிலும் ஈற்றில் வருடாந்தம் பிரதேசங்களுக்கிடையேயும் நடைபெற வேண்டும். இத்தகைய முயற்சிகளில் விசேட ஊக்கம் காட்டும் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணுக்கர்கள் ஆகியோர் உரிய மதிப்பைப் பெறுவர். இத்தகைய ஒவ்வொரு கொண்டாட்டத்திலும் வித்தியா பகுதியைச் சேர்ந்த ஓர் உத்தியேகத்தர் அல்லது பாடசாலைத் தலைவரே கடைசிப் பேச்சாளராக இருக்க வேண்டும். கொண்டாட்டத்தின்போது தெரிவிக்கப்பட்ட குறைபாடுகள் யாவற்றிற்கும் பதிலளித்தல் அவரது கடமையாகும்.

**ஆங்கிலம் படிப்பித்தல்**

எமது பாடசாலைகளில் ஆங்கிலம் படிப்பிப்பதன் முக்கியத்துவம் பற்றி எனது பாராளுமன்றக் காரியதரிசி எற்கனவே எனக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். எமது பாடசாலையில் ஆங்கிலம் படிப்பிப்பதன் முக்கியத்துவத்தைத் பற்றி அதிகம் அழுத்திச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. முன்போன்று ஆங்கில அறிவு மட்டும் ஒருவருக்கு விசேஷ கண்ணியம் எதுவும் அளிப்பதன்று. ஆங்கிலத்தை வாசிக்கவும் எழுதவும் விளங்கிக் கொள்ளவும் சுலபமாகப் பேசவும் படித்தால் போதுமானதாகும். ஆங்கிலப் புத்தகங்களில் மறைந்து கிடக்கும் அறிவுக் களஞ்சியத்தை நன்கு நுகரக் கூடிய வண்ணம் எமது பிள்ளைகளுக்கு அப்புத்தகங்களை வாசிக்கவும விளங்கிக் கொள்ளவும் கல்வி அளிப்பதில் தமது ஆற்றலையும் உபயோகிக்குமாறு எனது உத்தியோகத்தர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எமது சர்வகலாசாலை நூல் நிலையங்களில் உள்ள புத்தகங்களை அங்குள்ள மாணவர்கள் உரியவண்ணம் பயன்படுத்தாவிடின் அது எவ்வளவு பரிதாபப்படக்கூடியதோர் விஷயமாகும்.

**பாராளுமன்ற அங்கத்தவர்**

பாராளுமன்ற அங்கத்தவர் ஜனங்களின் பிரதிநிதிகளாவர். பகிரங்க சேவையாளர் (முன்பு அரசினர் சேவையாளர்) என்ற கோதாவில் பொது ஜனத்திற்கு நீங்கள் செய்ய வேண்டிய ஒரு கடமையுளது. ஆகவே நீங்கள் பொது ஜனத்திற்கு செய்யவேண்டிய கடமையில் உங்கள் பங்காளராகவே பாராளுமன்ற அங்கத்தவர்கள் கருதப்பட வேண்டும். விதிகளுக்கு விரோதமாக இருந்தபோதிலும் பாராளுமன்ற அங்கத்தவர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கவேண்டும் என நான் சற்றேனும் கூறவில்லை. ஆனல் அவர்களின் கோரிக்கைகள் விதிகளுக்கு அமையின் அவற்றை உங்கள் ஆலோசனைக்கு எடுக்க வேண்டும். சிலநேரம் ஒரு பாராளுமன்ற அங்கத்தவர் ஓர் ஆசிரியரைப் பற்றி முறைப்பாடு செய்யக் கூடும். அல்லது அவருக்கு செய்யப்பட்ட அநீதியைப் பற்றி முறைப்பாடு செய்யக் டும். இவ்விஷயங்களில் அப்பாராளுமன்ற அங்கத்தவருடன் ஒத்துழைத்து விஷயங்களை நன்ருய்ப் பரிசீலனை செய்வதுடன் பரிசீலனையின் முடிவுகளை அவருக்கு அறிவிக்க வேண்டும். அரசியல்வாதிகளின் தூண்டுதலின் பேரில் மாற்றங்கள் செய்தலை நான் வெறுக்கிறேன் என உங்களுக்குத் தெரியும். ஓர் ஆசிரியர் அரசியல் விஷயங்களில் ஈடுபடுகிருர் என்ற முறைப்பாட்டின் பேரில் அவருடைய மாற்றம் கோரப்பட்டால், பரிபாலன விதிகளின் பிரகாரம் அவ்வாசிரியர்மீது ஒழுக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

சமூக வாழ்க்கைக்கான வசதிகளையும் பண்பாடுகளையும் பாடசாலைகளிலும் எமது காரியலயங்களிலும் வளர்க்க வேண்டும். தன்னடக்கம், பிறரின் உணர்ச்சிகளையும் அபிப்பிராயங்களையும் மதித்து நடத்தல் ஆகிய நற்குணங்களின் பிரதிபிம்பமே நற்பழக்கம் என்பதை உணர்வோமாயின் நான் ஏற்கனவே கூறியதன் முக்கியத்துவம் நன்கு புலனுகும்.

கண்டசியாக நீங்கள் வகிக்கும் பதவி ஓர் நம்பிக்கைப் பொறுப்பாகும் என நினைவூட்ட விரும்புகிறேன். உங்களின் பொறுப்பில் உள்ள பிள்ளைகள் எதிர்கால சந்ததியாரின் சிருஷ்யாளராகும். நீங்கள் விசுவாசத்துடனும் சிறந்த உழைப்புடனும் உங்கள் கடமைகளைப் புரிவீர்களென ஜனங்களால் தெரிவு செய்யப்பட்ட மந்திரி என்ற கோதாவில் நான் எதிர்பார்க்கிறேன்.

அரசாங்கத் தொழிற் பகுதி

# இலங்கை போக்குவரத்துச் சபை

இலங்கைப் போக்குவரத்துச் சபை 23,000 க்கு மேற்பட்ட ஊழியரையுடைய தாபனமாகும். இது ஆண்டொன்றுக்கு மொத்தம் 6 கோடி ரூபாய் சம்பளம் வழங்கிவருகிறது.

2. ஊழியரின் தொகை மிகப்பெரிதாக இருப்பதால், நிருவாகத்தினருக்கும் ஊழியருக்குமிடையே சுமுகமான உறவை நிலவச் செய்யும் பொறுப்பை நிறைவேற்றுவது அவ்வளவு இலகுவான காரியமல்ல. குறித்த ஆண்டில் நிருவாகத்தினருக்கும் பிரதான தொழிற்சங்கங்களுக்குமிடையே கூட்டு ஆலோசனைகள் தொடர்ந்து நடைபெற்றன. கூட்டுச்சபை கடந்த ஆண்டில் 6 தடவைகளிற் கூடியது. கூட்டுச்சபையின் கூட்டங்களன்னியில், சாலைச்சபைகளும் பிரதேச ஆலோசனைச்சபைகளும் செயல்புரிந்து, மிகத் தாழ்ந்த மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை கூட்டாக ஆலோசிக்கும் வசதியையளித்தன. சென்ற ஆண்டில் அனேக பிணக்குகள், விசேடமாக, முறைநிரல்கள்பற்றி மீண்டும் மீண்டும் ஏற்பட்ட பிரச்னைகள் சம்பந்தமானவை சாலைச் சபைகளிற் தீர்க்கப்பட்டன.

3. சபையின் ஊழியரினது நல்வாழ்வு விடயத்தில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு சாலைகளிலும் பஸ்சாலைகளிலும் நல்வாழ்வு நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தற்கு, நல்வாழ்வு உத்தியோகத்தர் சாலை ஊழியரின் ஆலோசனையுடன் நடவடிக்கையெடுப்பார். விழாக்களையும் கொண்டாட்டங்களையும் ஒழுங்குசெய்தற்கு சிங்கள, தமிழ் புத்தாண்டு, வெசாக் விழா, பஸ்சேவை தேசியமயமாக்கப்பட்ட ஆண்டு தினம் ஆகிய வைபவங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இக்கொண்டாட்டங்களை நடத்துதற்குப் பல்வேறு சாலைகளிலுமுள்ள நல்வாழ்வுச்சங்கங்களுக்குச் சபை பணவுதவியளிக்கிறது. விளையாட்டு நடவடிக்கைகள் விடயத்தில் ஆர்வமூட்டப்படுகிறது. இரண்டாவது அகில இலங்கை விளையாட்டுப் போட்டியிற் பங்குபற்றியவர்களில் 30 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் பஸ்சாரதிகள், கண்டக்றர்கள், இயந்திரவேலையாளர் ஆகியோரென்பது திருப்தியளிப்பதாகும். களுத்துறையில் மிகப்பெரிய விளையாட்டுவிழாவை ஒழுங்குசெய்தற்கு இதேயின ஊழியரே பொறுப்பாகும். இவ்விளையாட்டு நடவடிக்கைகள் சபையால் ஏற்ற பணவுதவியுடன் நடத்தப்பட்டன. இந்நன்கொடைகளை வழங்கும் விடயத்தில் அனுசரிக்கப்படும் கொள்கை, நல்வாழ்வுச்சபை அல்லது செயற்குழு வசூலிக்கும் பணத்தொகைக்கு ஈடான தொகையைச் சபை வழங்கவேண்டுமென்பதாகும்.

4. கஷ்டப்படும் ஊழியருக்கு நிவாரணம் அளித்தற்கு, "அபராத நிதி" என்னும் நிதியிலிருந்து பணவுதவியளிப்பதையும் சபை அனுமதித்துள்ளது. 300 ரூபாயும் அதற்குட்படவும் சம்பளம் பெறும் ஊழியர் பின்வருவனவற்றிற்குப் பணவுதவிகள் அல்லது வட்டியில்லாக் கடன்கள் பெற இப்பொழுது உரித்துடையராவர் :—

(அ) கடமையாற்றுதற்குத் தேவைப்படும் மூக்குக் கண்ணுடிகள் வாங்குவதற்கு ;

(ஆ) ஓர் ஊழியரைச்சார்ந்து வாழ்வோர் இறக்குமிடத்து, சார்ந்து வாழ்வோர் கணவ ாக அல்லது மனைவியாக இருப்பின், ஊழியரைச் சார்ந்துவாழும் பிள்ளைகள், பெற்ருர் அல்லது பராயமடையாத சகோதரரொருவர் அல்லது ஊழியருடன் வாழும் விவாகமற்ற சகோதரி, அத்தகையபோவழி அவரையே சார்ந்து வாழ்வாராயின்.

5. ஊழியர் நீடித்தகாலம் நோயுற்றிருக்க நேரிடின், அத்தகைய காலம் மூன்றுமாதத்திற்கு மேற்பட்டிருப்பினும், ஊழியரைச்சார்ந்து வாழ்வோர் நீடித்த காலம் நோயுற்றிருப்பினும், சிகிச்சை பெறுதற்கு அபராத நிதியிலிருந்து கடன்கள் வழங்கப்படுகின்றன.

6. ஓர் ஊழியருக்குச் சொந்தமான வாசத்தலம் வெள்ளத்தினல், நெருப்பினல் அல்லது மின்னலினல், அல்லது விபத்துக்களினற் சேதமுற அல்லது அழியநேரிடினும் பணவுதவி அளிக்கப்படுவதுண்டு.

7. கூடுதலான சாலைகளுக்கு நவீன போசனசாலை, ஓய்வறை வசதிகளைச் சபை செய்துவருகிறது. கடந்த ஆண்டு 11 புதிய போசனசாலைகள் திறக்கப்பட்டன. போதிய போசனசாலை வசதிகளில்லாத மற்றும் சாலைகளிலும் போசனசாலைகளையமைக்க நடவடிக்கை யெடுக்கப்பட்டுவருகிறது. ஓய்வறைகள் விடயத்திலும் இவ்வண்ணமே செய்யப்பட்டுவருகிறது. இதுவரை அமைக்கப்பட்ட ஓய்வறைகள், தளவாடங்களும் உள்ளக விளையாட்டுக்களுக்கு வசதிகளும் உடையனவாகும்.

8. சபையின் ஊழியர் தங்கள் குடும்பங்களுடன் யாத்திரை செல்வதற்கும், சுற்றுப்பிரயாணம் செய்வதற்கும் சபை உதவிசெய்கிறது. சென்ற ஆண்டில் இத்தகைய 72 யாத்திரைகளைப் பல்வேறு சாலைகளும் ஒழுங்குசெய்தன.

9. விவசாயப்பகுதியும் இலங்கை வர்த்தகச்சங்கமும் ஒழுங்குசெய்துள்ள "அதிக உணவு பயிரிடும்" முயற்சியின்கீழ் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட செடிகளும் விதைகளும் தலைமைக் காரியாலயத்திலுள்ள சபைஊழியருக்கு விநியோகிக்கப்பட்டன. இதன்வியில், சபைக்குச் சொந்தமான நிலம் யாதாயினும் சபையால் உபயோகிக்கப்படாதிருப்பின், அத்தகைய நிலத்தை ஊழியர் விவசாய உற்பத்திக்காக உபயோகிக்கவும் வசதிசெய்யப்பட்டுள்ளது.

10. (மேல்நாட்டு) வைத்தியர், அப்போதிக்கரிமார் ஆகியோரையுடைய வைத்தியப் பிரிவொன்று வைத்திய வசதிகளை அளித்துவருகிறது. இப்பொழுது இரத்மலானையிலொன்றும், வெரஹெரயில் மற்றொன்றுமாக இரு வைத்திய நிலையங்களுள.

11. சபையின் தொழிற்சாலைகளிலும் சாலைகளிலும் பொதுவான சுகாதாரத் தரங்களை நிலவச்செய்யும்பொருட்டு, வைத்தியர்கள் குறித்த தாபனங்களைப் பார்வையிடுவர். சுகாதாரப்பகுதியின் உதவியுடன் ஊழியருக்குச் சுகாதாரக் கல்வியூட்டுதற்கு வகுப்புகள் நடத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. பெருவாரியாக நோய்கள் ஏற்படும்பொழுது சபையின் ஊழியர் யாவருக்கும் அம்மைப்பால் கட்டச் சபையின் வைத்தியப் பிரிவு ஒழுங்கு செய்யும்.

12. பஸ் சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு பல பாதுகாப்பு முறைகள் கையாளப்பட்டன. தீயணைக்கும் கருவிகளும் மற்றும் கருவிகளும் நல்ல நிலையில் இருக்கின்றனவாவென்பதை நிச்சயிக்கும்பொருட்டு தீயணைக்கும் உபகரணங்கள் அடிக்கடி பரிசோதனை செய்யப்பட்டன. அலிற்றிலீன் மின்சூள் உபயோகித்து பஸ் சாலைகளிற் பற்றவைக்கும் வேலை செய்வோர் பாதுகாப்புக்குளிர்ச்சிக் கண்ணுடிகளை அதிகமாக அணிந்துவந்தனர். உறைகுழைகளுக்குக் காற்றுச்செலுத்துகையில் பாதுகாப்புச் சாதனங்களாக லோகக்கூடுகள் அதிகமாக உபயோகிக்கப்பட்டுவந்தன.

13. இலங்கைப் போக்குவரத்துச் சபை போன்ற ஒரு பெரிய தாபனத்தில் திருப்தியும் கடமையுணர்ச்சியும், விசுவாசமுமுடைய ஒரு கோட்டியை அமைப்பது அவசியமாகும். இது ஓர் இலகுவான காரியமல்ல. ஊழியரின் சம்பளத்தை நியாயமான அளவுக்கு அதிகரித்து, வேலை நேரத்தை ஒரு தரத்தில் அமைத்து சேமநிதிச் சகாயங்களை வழங்கி, லீவுச்சலுகைகள் வைத்தியவசதிகள். நல்வாழ்வு வசதிகள் ஆகியவற்றையும் மற்றும் அனேக சலுகைகளையும் அளித்து, இவற்றின்மூலம் இந்நோக்கத்தை ஈடேற்றச் சபை பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதனல், ஊழியரின் நிலைமை திருந்துவதோடு, அவர்கள் கூடுதலாகத் திருப்தியடையவும், பிரயாணஞ் செய்வோருக்குக் கிடைக்கும் சேவையின்தரம் உயரவும் நேரிடுமெனச் சபை உறுதியாக நம்புகிறது.

14. இதை அடைதற்குரிய முக்கியமான தேவைகளிலொன்று ஊழியரிடையே கட்டுப்பாட்டு மனப்பான்மை நிலவுதலாகும். சபை ஆரம்பத்தில் தமது ஊழியரைத் தெரிவுசெய்து எதிர்காலத்திற்கு அவர்களைப் பயிற்றுவித்துத் தயார் செய்யும் சந்தர்ப்பம் கிடையாதமை துரதிர்ஷ்டவசமாகும். ஆயினும், இலங்கை ஜெர்மானியப் பயிற்சித் தொழிற்சாலையிலும், சாரதிகள், கண்டக்றர்கள், மற்றும் தரைமட்ட ஊழியர் ஆகியோருக்குரிய சபையின் பயிற்சிப் பாடசாலையிலும் இப்பொழுது ஒழுங்குசெய்யப்பட்டுள்ள பயிற்சி இக்குறையை ஓரளவுக்குத் தீர்க்கிறது. இலங்கை ஜெர்மானியப் பயிற்சித் தொழிற் சாலையில் 3 ஆண்டுகால மோட்டார் இயந்திரப் பயிற்சிபெறும் ஊழியருக்குப் போதனசிரியர்கள் சுயகண அபிமானத்தையும் சிறந்த கட்டுப்பாட்டையும் புகட்டிவருகின்றனர். மேலும், மாணவர்களுக்குப் பயிற்சிப் பாடசாலைக்கப்பாற்பட்ட நடவடிக்கைகளை ஒழுங்கு செய்வதிலும் அவர்கள் விசேட கவனஞ் செலுத்துகின்றனர்.

# இளம்பிள்ளை வாத நோய்த் தடுப்பு

## இரண்டாம் நேரமருந்து கொடுத்தல்

வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட காலி மாவட்டத்தைத் தவிர இத்தீவின் ஏனைய பாகங்கள் முழுவதிலும் ஜூலை மாதம் 15 ந் திகதியன்று தேசிய இளம்பிள்ளை வாதத் தடுப்புக்கு இரண்டாம் நேர மருந்து கொடுக்கும் இயக்கம் ஏக காலத்தில் ஆரம்பமாகும். காலி மாவட்டத்தில் இவ்வியக்கம் ஜூலை 22 ந் திகதிக்குப் பின்போடப்பட்டிருக்கிறது. கொழும்பு மாநகரசபையில் இவ்வியக்கம் ஜூலை மாதம் 14 ந் தேதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகும்.

அண்மையில் இந்நோய்த் தடுப்புக்கு முதலாம் நேர மருந்து கொடுக்கும் இயக்கம் மேற்கொள்ளப்பட்டபோது 19,19,292 பிள்ளைகள் தடுப்பு மருந்தைப் பெற்றனர். இத்தொகை இந்நாட்டில் 3 மாதத்துக்கும் 8 வருடத்துக்குமிடைப் பட்ட வயதினர்களாகவுள்ள பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கையில் 78·7 சத விகிதமாகும். முதலாம் நேர மருந்து கொடுக்கும் இயக்கம் இவ்வளவில் வெற்றியீட்டியதற்கு பொதுமக்கள் அளித்த ஆதரவும், ஒத்துழைப்பும், தொண்டர்களதும், பல்வேறு அரசாங்கப் பகுதிகளதும் தீவிர முயற்சிகளுமே முக்கிய காரணங்களாயிருந்தன.

எனினும் அவ்வியக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, இந்நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்மேற்குப் பிரதேசத்தைத் தவிர, ஏனைய இடங்களில் தடுப்பு மருந்து பெற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை மிகவும் உற்சாக மூட்டியது. அப்போது பதுளை, அனுராதபுரம், மட்டக்களப்பு, குருநாகல், வவுனியா ஆகிய ஐந்து சௌக்கிய பிரிவுகளிலும் அங்கங்குள்ள பிள்ளைகளில் 90 சதவிகிதமானவர்களும், அதற்கதிகமானவர்களும் தடுப்பு மருந்து பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேசிய இளம்பிள்ளைவாதத் தடுப்பியக்கத்தின் முழு நோக்கமும் இதுவரை பாதிக்குப் பாதியே நிறைவேறியுள்ளது. இதன் வெற்றிக்கும், இளம்பிள்ளை வாதத்திலிருந்து பிள்ளைகளைப் பூரணமாகப் பாதுகாப்பதற்கும், இரண்டாம்நேர மருந்து கொடுக்கும் இயக்கம் முன்னைய இயக்கத்தைவிடப் பெருமளவில் பயன்படுத்தப்படவேண்டும்.

முந்திய இயக்கத்தின்போது இருந்தவாறு, இத்தடவையும் இந்நாட்டின் சகல பாகங்களிலும் நோய்த்தடுப்பு மருந்து கொடுக்கும் நிலையங்கள் திறக்கப்படும். இந்நிலையங்கள் பாடசாலைகளிலும், கிராமாபிவிருத்திச்சங்க மண்டபங்களிலும், சனசமூக நிலையங்களிலும், பொதுமக்கள் கஷ்டமின்றிவந்து போகக்கூடிய வேறு பொது இடங்களிலும் நிறுவப்பட்டிருக்கும். முதல் நேர மருந்து கொடுக்கும் இயக்கத்தில் பங்குபற்றிய சகல தொண்டர்களும் இந்த நிலையங்களில் செயலாற்றுவதுடன் மருந்து கொடுப்பதிலும், பிள்ளைகளை நிலையங்களுக்குக் கொண்டுவருவதிலும், சௌக்கியப் பகுதி உத்தியோகத்தர்களுக்கு உதவியளிப்பார்கள். சென்ற இயக்கத்தின்போது முதல் நேர மருந்தைப் பெற்ற பிள்ளைகள் இத்தடவை இரண்டாம் நேர மருந்தைப் பெற்றுக் கொள்ள வேண்டியது கட்டாயமும், அவசியமுமாகும்.

இரண்டாம் நேர மருந்தை உட்கொள்ளாத பிள்ளைகளின் உடலில் இந்நோயை, எதிர்க்கும் சக்தி அதிக காலம் இருக்க மாட்டாது. எனவே இந்நோயின் தாக்குதலிலிருந்து பூரணமாக விடுபடுவதற்கு முதல் நேர மருந்தைப் பெற்ற பிள்ளைகள் யாவரும் இரண்டாம் நேர மருந்தையும் பெறவேண்டியது அத்தியாவசியம்.

தேசிய இளம்பிள்ளைவாதத் தடுப்பியக்கத்தின் கடைசி நடவடிக்கையில் பங்குபற்றும் தொண்டர்களுக்கும், சௌக்கியப் பகுதி உத்தியோகத்தர்களுக்கும் பூரண ஒத்துழைப்பளிக்குமாறு சௌக்கியப் பகுதி மீண்டும் சகல பெற்றோர்களையும் வேண்டிக் கொள்கிறது. இந்த இயக்கத்தின் முழு வெற்றியும், இளம்பிள்ளை வாதத்திலிருந்து எம் பிள்ளைகள் பாதுகாப்புப் பெறுவதும், இப்பெரும் இயக்கத்தில் ஒத்துழைப்பதற்குப் பெற்றோர்கள் தயாராயிருப்பதிலேயே தங்கியிருக்கின்றன. இப்பொழுது கொடுக்கப்படும் மருந்து பாதுகாப்பானதும், தீங்கற்றதுமாகும். அத்துடன் இது சக்தி வாய்ந்ததாகவுமிருக்கிறது. எனவே இந்தப் பயங்கரமான வியாதியிலிருந்து உங்கள் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் முக்கியமான கடமையாகும் என்பதைச் சிந்தித்து அதைத் தவறாது நிறைவேற்றுங்கள்.

## உடவளவைத் திட்ட ஆரம்பம்

உடவளவைத் திட்டத்தை ஜூலை மாதம் 12 ஆம் திகதி காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. சி.பி. டி சில்வா ஆரம்பித்து வைப்பார்.

இத்திட்டத்தின் பயனாக வருடாந்தம் 45 லட்சம் புசல் நெல் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் நெல் உற்பத்தியில் பத்து சத விகித அதிகரிப்பு ஏற்படும். இதன் விளைவாக வருடாந்த அரிசி இறக்குமதியில் 16 சத விகிதம் குறைவதுடன், கணிசமான அளவு வெளிநாட்டுக்குச் செலவாணியும் மிகுதிப்படும்.

இத்திட்டத்தின் கீழ், 16,600 குடியேற்ற வாசிகளுக்கு 33,000 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. மிளகாய், வெண்காயம், மரக்கறி போன்ற உப பயிர்களை உற்பத்தி செய்வதற்கு இந்நிலங்கள் மிக உகந்தவை. இத்தகைய பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு ஆகும் பணமும் மிகுதிப்படும். இவ்வாறு ஏறக்குறைய ஒரு கோடி ரூபா மிச்சம் பிடிக்கலாம்.

உடவளவைத் திட்ட நிர்மாணிப்பு வேலையினால் பலருக்கு வேலை வாய்ப்புக் கிட்டும். பத்து வருட காலத்துக்குத் தேர்ச்சியும், அரைத் தேர்ச்சியும் பெற்ற தொழிலாளர் சுமார் 1,500 பேரும், தேர்ச்சியற்ற தொழிலாளர் சுமார் 1,000 பேரும் தேவைப்படுவர்.

## எப்பிள்ளையும் கல்வி...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சாலை அலுவல்கள், பெற்றோர்–ஆசிரியர் சங்கங்கள், ஆங்கிலத்தைப் போதித்தல் முதலான பல அம்சங்களைத் தொட்டும் அமைச்சர் பேசினார். தலைமைக் கந்தோரில் மாற்ற விஷயங்களை நடுநாயகப் படுத்தும் எண்ணம் இல்லை எனத் தெரிவித்தார். ஆயினும் மாற்ற விஷயங்களை ஒருமுகப் படுத்துதற்குத் தலைமைக் கந்தோரில் ஒரு பிரிவு இருப்பது அவசியம் எனவும் கூறினார்.

புதுப் பாடசாலைகளை எடுக்கும் விஷயத்தைப் பொறுத்தமட்டில், இந்நிதி வருடத்திற்கு முன்னர் அவ்வேலைகளைப் பூர்த்தி செய்யுமாறு அதிகாரிகளைப் பணித்தார்.

ஆங்கிலம் போதிப்பதன் அவசியத்தைத் வலியுறுத்திய அமைச்சர், பிள்ளைகள் ஆங்கிலத்தை வாசித்து, அறிந்து கொள்ளக்கூடிய ஆற்றலைப் பெற அதிகாரிகள் வழிசெய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## சர்வதேச கூட்டு . . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார வாழ்வின் ஒரு முக்கிய அம்சமாகத் திகழ்கிறது.

கூட்டுறவு இயக்கத்தின் லட்சியங்களில் எமது நம்பிக்கையை வலியுறுத்தும் போதே இவ்வியக்கத்தின் லட்சியங்களை எய்த வேண்டுமானால், இதற்கு அபகீர்த்தியைக் கொண்டுவந்துள்ள நேர்மையற்ற பேர்வழிகளை அகற்றுதற்கு நாங்கள் முடிவு செய்தாக வேண்டும்.

உண்மையான கூட்டுறவு முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருக்கும் எங்கள் நல்வாழ்த்து.

# இலங்கை வானொலி நிகழ்ச்சிகள்

**10.7.63 தொடக்கம் 14.7.63 வரை**

### சனி ஜூலை 13

காலை

6.45 உதயகீதம் ‡<br>
6.50 சைவ நற்சிந்தனை—க. இராமச்சந்திரா<br>
6.55 கிறிஸ்தவ நற்சிந்தனை எஸ். ஜெபநேசன்<br>
7.00 செய்திகள்<br>
7.10 அறிவிப்புகள்<br>
7.15 மூவர் இசை †<br>
7.45 திரை இசை †<br>
8.15 இஸ்லாமிய கீதம் †<br>
8.30 ஒலிபரப்பு முடிவு

பகல்

12.00 சித்ரகானம் †<br>
12.45 செய்திகள்<br>
12.55 அறிவிப்புகள்<br>
1.00 கதம்ப இசை †<br>
1.30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5.00 சிறுவர் பகுதி—<br>
பிறந்ததின வாழ்த்துக்கள்<br>
5.15 இளைஞர் மன்றம் —<br>
5.45 திரை இசை<br>
6.00 செய்திகள்<br>
6.10 விலைவாசிகள்<br>
6.15 கிராம சஞ்சிகை—கூட்டுறவு நிகழ்ச்சி<br>
6.45 வயலின் எஸ். இரத்னசபாபதி<br>
7.15 கண்டதும் கேட்டதும்—செய்திச் சுருள்<br>
7.30 நேயர் விருப்பம்<br>
8.00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**<br>
மலாய்ப் பேச்சு—<br>
" வாரீர் மலாயீர் "—<br>
எம். அமீன் அக்பர்<br>
8.15 பேச்சு—<br>
" இஸ்லாம் இயம்பும் வாழ்க்கை முறைகள் ", எம். ஓ. எச். எம். பாஸில்<br>
8.30 பாட்டு—<br>
ஸில்வா அப்துல் காதர்<br>
9.00 செய்திகள்<br>
9.10 அறிவிப்புகள்<br>
9.15 பேச்சு—<br>
இருவம்சம், திருமதி மீனாட்சி பானுத்துரை<br>
9.30 பாட்டு—<br>
அம்பிகா தாமோதரம் ஞானசுப்பிரமணியம்<br>
10.15 இசையமுதம்<br>
10.30 ஒலிபரப்பு முடிவு

★ ★ ★

### ஞாயிறு ஜூலை 14

காலை

6.45 பாமாலை<br>
6.55 கிறிஸ்தவ நற்சிந்தனை—என். ஜெபநேசன்<br>
7.00 செய்திகள்<br>
7.10 அறிவிப்புகள்<br>
7.15 தேர்ந்த இசை<br>
7.45 திரை இசை†<br>
8.15 தமிழ் மூலம் சிங்களம்<br>
8.30 **ஞானாஞ்சலி**—(மறுஒலிபரப்பு)<br>
9.00 இஸ்லாமிய சமயப் பாடசாலை—நடத்துபவர் : மவுலவி ஏ. அப்துர் றஹ்மான்<br>
9.30 **கிறிஸ்தவ நிகழ்ச்சி**—நடத்துபவர் : வண. கே. ஜே. மில்ஸ் அவர்கள்<br>
10.00 ஒலிபரப்பு முடிவு

பகல்

11.30 சிறுவர் மலர்—தயாரிப்பு வானொலி மாமா<br>
12.15 நேயர் விருப்பம்†<br>
12.45 செய்திகள்<br>
12.55 அறிவிப்புகள்<br>
1.00 **மாதர் பகுதி—**<br>
1. நெஞ்சமகலா நினைவுகள்—<br>
திருமதி தர்மராஜா<br>
2. சிறுகதை நாடகம்<br>
1.30 ஒலிபரப்பு முடிவு

மாலை

5.00 **சிறுவர் பகுதி**—பிறந்ததின வாழ்த்துக்கள்<br>
5.15 பாட்டு—நாகலக்ஷ்மி சத்யவாகீஸ்வரன்<br>
5.45 திரைக்குரல்<br>
6.00 செய்திகள்<br>
6.10 குரல்வகை<br>
6.30 வீணை—<br>
சுந்தரேஸ்வரி சபாரத்தினம்<br>
7.00 மாதர் கேட்டவை<br>
7.30 பாட்டு—ஜகதாம்பிகை பரமநாதன்<br>
8.00 **முஸ்லிம் நிகழ்ச்சி—**<br>
மணிமொழிகள்<br>
மவுலவி எச். எல். எம். இப்ருஹீம்<br>
8.15 மாணவர் மன்றம்—மூடுகாடு முஸ்லிம் பாடசாலை, கொட்டார்தீவு<br>
8.30 நேயர் கேட்டவை†<br>
9.00 செய்திகள்<br>
9.10 அறிவிப்புகள்<br>
9.15 நாடக அரங்கு, " **யார் குற்றம்** " சரஸ்வதி இராசதுரை எழுதியது<br>
9.45 நிலைய ஒலிப்பதிவுகள்<br>
10.30 ஒலிபரப்பு முடிவு

†இசைத்தட்டு ‡நிலைய ஒலிப்பதிவு

# ஒன்றரைக் கோடி யார் புடவை

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு ஒரு கோடி ஐம்பது லட்சம் யார் புடவை இறக்குமதி செய்ய முன்னர் வழங்கப்பட்ட அனுமதியைவிட, மேலும் முப்பது லட்சம் யார் புடவை இறக்குமதி செய்வதற்கு விசேஷ அனுமதியையும் அரசாங்கம் வழங்கியுள்ளது. வாழ்க்கைச் செலவு சம்பந்தமாகப் பரிசீலனை செய்வதற்கு நிறுவப்பட்ட அமைச்சுக் குழு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் மேலும் புடவை இறக்குமதி செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும் எனத் தீர்மானித்தது. அத் தீர்மானத்திற்கு இணங்க, வழங்கப்படும் முதல் புடவை இறக்குமதி இதுவேயாகும். அமைச்சுக் குழுவில் நிதி அமைச்சர், உணவு, விவசாய, கூட்டுறவு அமைச்சர், வர்த்தக, கைத்தொழில் அமைச்சர் அங்கம் வகிக்கின்றனர்.

மக்கள் அதிகம் நாடி வாங்கும் புடவை வகைகளை இன்னும் அதிகமாக இறக்குமதி செய்து, அதன்மூலம் அவற்றின் விலைகளை ஸ்திரப்படுத்தக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்துக்கு உதவவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

ஆர் 10620—5,008 (7/63)